திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் வரம்பியம் ஊராட்சி மன்ற தலைவரின் செயல்முறைகள்

முன்னிலை: R. முருகானந்தம்

பொருள்: மனைப்பிரிவு - திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், வரம்பியம் ஊராட்சி விட்டுக்கட்டியில் புல எண்.231/1B-ல் அமையப் பெற்றுள்ள குறிஞ்சி நகர் 24 மனைகள், மனை பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

பார்வை: 1. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உதவி இயக்குநர் திருவாரூர் கடிதம் எண்:12007/2023/TVR/2023TCP, நாள்:25.08.2023.
2. ஊராட்சி மன்ற தீர்மானம் எண்:72, நாள்:19.11.2024
3. தானப்பத்திரம், ஆவண எண்:1740/2023.
4. தங்களது கடிதம் தேதி 06.01.2024.

உத்தரவு:

தீவாம்பாள்புரம் வருவாய் கிராமம், வரம்பியம் ஊராட்சி விட்டுக்கட்டி கிராமத்தில் புல எண்.231/1B-ல் அமைக்கப்பட்டுள்ள குறிஞ்சிநகர் மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் கோரிய பொருள் தொடர்பாக பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் உத்தேச மனைப்பிரிவு அனுமதிக்காக உள்ளாட்சிக்கு சேர வேண்டிய சாலைகள் மற்றும் பூங்காவிற்கான ஒதுக்கீட்டு இடங்களுக்கான தான ஆவணம் பதிவு செய்யப்பட்டுவிட்டது.

வரம்பியம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்:72/2024, தேதி: 19.01.2024-ன் படி மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்த மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க இதன்மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

இடம்: வரம்பியம்
தேதி: 19.01.2024

தலைவர்,
வரம்பியம் ஊராட்சி மன்றம்.
வரம்பியம்.

இணைப்பு:

1. ஊராட்சி மன்ற தீர்மானம்
2. மனைப்பிரிவு
3. மனைப்பிரிவு அனுமதி கட்டணம் செலுத்தியதற்கான சீட்டு
4. நிலசந்தை மதிப்பு 3 சதவீதம் செலுத்தியதற்கான சீட்டு

நகல்:

1. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருத்துறைப்பூண்டி.
2. உதவி இயக்குநர், மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர்.
3. சாரா அம்மாள்- ஆதிரெங்கம்.